# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.67/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : பாப்பா முத்தையா | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : ஆசிரியர் ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**07.01.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்தேன் என்றால் ஆசிரியராக பணிபுரிந்தேன். வழக்கு தாக்கல் செய்த சுரேஷ் குமார் தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி மூர்த்தியை தெரியுமா என்றால் தெரியும். பிரேமா என்பவர் என் மனைவி ஆவார். வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் மூர்த்தியிடம் இருந்து நிலம் வாங்கினோம். அது சம்மந்தமான வழக்கு என்று நினைக்கிறேன். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 171/4A ஆகும். விஸ்தீரணம் 86 சென்ட் ஆகும்.

2. நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 2001ல் மூர்த்தியிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் மூர்த்தியிடம் கிரையம் வாங்கும்போது வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். வருவாய் துறை ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால் பட்டா, சிட்டா, அடங்கல் மூன்றையும் பார்த்தேன். நான் கிரையம் பெறும்போது பார்த்தத வில்லங்க சான்று, பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தற்போது உள்ள ஆவணங்களைதான் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் 2001ல் கிரையம் பெறும்போது பெற்ற வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த தேதி, மாதம் கிரையம் பெற்றேன் என்பதை சொல்லமுடியுமா என்றால் 31.08.2001 ஆகும்.

31.08.2001 தேதியிட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நான் என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் கிரயம் பெற்ற அசல் கிரைய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேயில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 2001ம் தேதியிட்ட ஆவணத்தை நீதிமன்றதத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் நான் ஆவணங்கள் அனைத்தையும் வழக்கறிஞரிடம் காண்பித்தேன். அவர் தேவையான ஆவணத்தைமட்டும் எடுத்துக்கொண்டார். மீதி ஆவணங்களை கைவசம் வைத்துள்ளேன்.

4. வழக்கு சொத்து என்னுடையது என்பதற்கு நான் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று, பட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆதியில் பட்டா யார் பெயரில் இருந்தது தெரியுமா என்றால் குப்பம்மாள் பெயரில் இருந்தது. நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் குப்பம்மாள் மகனிடம் இருந்து வாங்கினேன். யார் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் மூர்த்தியிடம் இருந்து கிரையம் வாங்கினேன். பாலன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மொத்தம் 3 பேரிடம் ஒன்றாக கிரையம் வாங்கினேன். ஒருவர் பெயர் ஏழுமலை ஆகும். மற்றொருவர் பெயர் ராணியம்மாள் என நினைக்கிறேன்.

5. வழக்கின் வாதிகள் குப்பம்மாளின் பேரப்பிள்ளைகள் என்றால் சரிதான். தாவா சொத்து நான் கிரையம் வாங்கும் முன்பு குப்பம்மாள் பெயரில் இருந்த கிரைய ஆவணம் எதையும் பார்த்துள்ளேனா என்றால் நான் கிரைய ஆவணம் எதையும் பார்க்கவில்லை. பட்டாதான் பார்த்தேன். **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** பட்டா, சிட்டா, அடங்கல் பார்த்தேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)